# Remembering Hiroshima Nagasaki after 65 years...



இந்த தள்ளாத வயதில் பின்னோக்கி போகின்றன என் நினைவுகள்...

என் அன்னையிடம் பசி என்று நான் அழுத அழுகை தவறா...
விளையாட நான் அழைத்த நண்பர்கள் கணப்பொழுதில் சாம்பலாகி போனதை கண்டு எழுந்த அழுகை தவறா...
நான் ஆசையுடன் விளையாடிய என் பொக்கிஷங்களை இந்த சாம்பலில் தேடி ஏமாற்றம் அடைந்த அழுகை தவறா...
பசிக்கும் வயிற்றுக்கு சிறிது பால் கொடுக்க எண்ணி என் தாயின் மடி தேடி கிடைக்காமல் எழுந்த அழுகை தவறா...
தூக்கம் என் கண்களை தழுவ நேற்று பாதியில் விட்ட கதையின் மீதியை கேட்க என் பாட்டியின் அருகாமையை தேடி எழுந்த அழுகை தவறா...
நான் உறங்கும் பொழுது என் விரல் நுனியில் பிடித்து கொண்டு தூங்கிய என் தந்தையின் சொக்காயுடன் அவரின் வாசமும் சேர்ந்து கருகியதால் எழுந்த அழுகை தவறா...
எனக்கு பிடித்தவர்களை தேடி தேடி சோர்து உட்கார்ந்து அழுத அழுகை தவறா...
நான் தனிமை படுத்தப்பட்டு வந்த பயத்தால் எழுந்த அழுகை தவறா...
நான் செய்த தவறு தான் என்ன என்று என் மனதில் ஓயாமல் எழும் கேள்விகள்...
விடை தெரியாமல் என் கை தடியில் விழுந்த கண்ணீரை துடைத்து கொண்டு
முன்னே நடக்கிறேன்.. என் நினைவுகளை பின்னோக்கி போக விட்டு...

Gayathri Ramesh
GRD Iyers